1994 மார்ச் 17]

முற்பகல் 10–10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சார்நிலைக் கருவூலங்கள் வாடகைக் கட்டிடங்களில் தான் இயங்கி வருகின்றன. ஆண்டுக்காண்டு 2 அல்லது 3 என்ற விகிதத்தில் அவற்றுக்கான கட்டிடங்கள் ஆங்காங்கு கட்டப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே துவக்கப்பட்டு, பல்லாண்டுக்காலம் நடைபெற்று வருகின்ற சார்நிலைக் கருவூலங்களுடைய அவசியம், தேவை, நெருக்கடி ஆகியவைகளை எல்லாம் உள்ளத்திலே கொண்டு ஆங்காங்கு கட்டப்பட்டு வருகின்றன. அந்த முறைப்படி ஆண்டிப்பட்டியில் உள்ள சார்நிலைக் கருவூலத்திற்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு இப்போது இல்லை. நாளடைவில் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 2, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

2—

மதுரை சார்பு நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமித்தல்.

* 9313— திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சார்பு நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாமல் நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நீதிபதிகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரையில் 3–வது கூடுதல் சார்பு நீதிபதி பதவி மட்டுமே காலியாக இருந்தது. அதுவும் தற்போது நிரப்பப்பட்டுவிட்டது.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே 3-வது சார்பு நீதிமன்றத்திலே கடந்த 5 ஆண்டுகாலமாக நீதிபதி இல்லாத நிலை இருந்ததால் அங்கே வழக்குகள் அதிகமாக தேங்கி இருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிபதியை நியமனம் செய்துவிட்டதாக விடை கொடுத்தார்கள். அங்கே அதிகமான வழக்குகள் தேங்கி உள்ளதால் மேலும் ஒரு சார்பு நீதிமன்றம் மதுரையில் அமைப்பதற்கு ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[1994 மார்ச் 17

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் குறிப்பும் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 3, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

3—

நகர்ப்புற நிலவரி நிலுவைத் தொகைகளை வசூலித்தல்.

*20795—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர்ப்புற நிலவரி நிலுவைத் தொகைகளை வசூலிக்க விரைவான நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது பெரியதனக்காரர்களிடமிருந்து நிலவரியை வசூலிக்காமல் சாதாரண சிறிய கடைகள் மீது நிலவரி போட்டு, வசூலிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிலுவையில் இருக்கிற கோடிக்கணக்கான ரூபாய்களை மிக விரைவாக வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எந்த வகையில் எடுத்திருக்கிறது என்பதை விளக்க, அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் சிறியவர்கள், பெரியவர்கள் என்று பார்ப்பது இல்லை. இதில் மனை எவ்வளவு என்று பிரித்துவிடுகிறோம். சென்னை என்றால் எவ்வளவு; சென்னையின் சுற்றுப்புறம் என்றால் எவ்வளவு என்று பார்க்கிறோம். இப்போது சென்னையைச் சுற்றியுள்ள பகுதியாக இருந்தால் 3 மனைகள் வரையில் வரியே இல்லை. சென்னை என்றால், 2 மனைகளுக்கு வரியே இல்லை. சென்னையின் சுற்றுப்புறப் பகுதியாக இருந்தால், 3 மனைகளிலிருந்து, 7 மனைகள் வரை 0.7 சதவீதம்; 7 மனைகளிலிருந்து 10 மனைகள் வரைக்கும் 1 சதவிதம் ; 10 மனைகளிலிருந்து 20 மனைகள் வரைக்கும் 1.5 சதவீதம். இதேபோல் இவர்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்